முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 765**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.11.2021, செவ்வாய்கிழமை

1. ஓங்கார சக்தியே ஞானதேசிகா
ஓங்கார சூட்சுமமே ஆறுமுக அரங்கா
ஓங்கார குடில் படைத்து வாழும் ஞானியே
ஓதிடுவேன் சுப்ரமணியர் யானும் உந்தனுக்கு
2. உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி உயர்வாக பிலவ துலை திங்களில் உரைப்பேன்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 16ம் நாள், 02.11.2021 செவ்வாய்கிழமை)
சிந்தைபட ஆறுமுகப்பெருமான் யானும் செப்பிடுவேன் அரங்கன் நீ கேட்க
மறுப்பின்றி அரங்கன் வழிகாட்டலில்
மண்ணுலகம் சர்வ சித்திபெறும்
3. சித்தி மிகுந்த அரங்கன் அருளாலும் தீட்சையாலும்
சிந்தை தெளிவு கண்டு உலகமக்களெல்லம்
சத்திய நெறி குன்றா வண்ணம் வாழும்
சர்வ சூட்சுமங்கள் பெற்று உயர நேரும்
4. நேர்மைகொண்டு அரங்கன் தர்மத்தை
நிலவுலகில் ஸ்தாபிக்கும் அனைவருமே
வறுமை விலகி பலமும் கூடி
வாழ்வின் காலமே ஆறுமுகப்பெருமான் எந்தன் ஆசி பெற்று
5. ஆசிபெற்று அளவில்லா அதீத சக்தி கூடி
ஆற்றல்பட உலகமாற்றம் தன்னில்
பேசிட பெரும் பங்கு கொண்டு கலியுகத்தார்
பிரம்ம சூட்சும ரகசியங்கள் அறிய நேரும்
6. நேர்மைகொண்டு அரங்கனை தொடர்ந்தால்
நிலவுலகில் ஞானியாகும் வாய்ப்பும்
ஆறுமுகப்பெருமான் என்னருளாலே கிட்டும்
ஐயமற அரங்கனை தொடர்ந்து வர
7. வருகின்ற மக்கள் படைகளுக்கு
வல்லமை கூட்டி வடிவேலன் யானும்
தருகின்றேன் சூட்சும வரமும் சக்தியும்
தாமுரைத்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–